தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 27, பவ - திருவள்ளுவர் ஆண்டு—2026

1995, ஏப்ரல் 10, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்."*

தம்மிடம் இருக்கும் வலிமை இவ்வளவுதான் என்பதை அறியாத பலர் ஏதோ ஒரு ஊக்கத்தில் ஒரு செயலைச் செய்யத் தொடங்கி பின்னர் இடையில் அதை முடிக்க முடியாமல் தோல்வியுறுவார்கள்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *281,* திரு. எம். தங்கவேல், இருக்கையில் இல்லை.

வினா எண் *282,* திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

282—

எடைக் கருவிகளுக்கு ஈராண்டுக்கொருமுறை முத்திரையிடுதல்

35378*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1995 ஏப்ரல் 10

(அ) மீட்டர் அளவுகோல், தராசு ஆகிய எடைக் கருவிகளுக்கு ஓராண்டுக்கொருமுறை சோதனை செய்து முத்திரையிடுவதை மாற்றி ஈராண்டுக்கொருமுறை முத்திரையிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்று, இந்த நான்கு ஆண்டுக் காலத்திலே இந்தியாவிலே எந்த முதல் மந்திரியும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளைப் படைத்துவரும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மீட்டர் அளவுகோல், தராசு, எடைக் கற்கள் ஆகியவற்றை ஓராண்டுக்கு ஒருமுறை சோதனை செய்து முத்திரை இடுவது வியாபாரிகளுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. வியாபாரிகளுக்கு தினசரி எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அத்தனையையும் சமாளித்துக் கொண்டு தொழில் செய்து வருகிறார்கள். ஓராண்டுக்கு ஒருமுறை சோதனை செய்து முத்திரை இடுவதற்கு அலுவலகத்திற்குச் சென்றால் இன்று முடியாது; அடுத்த வாரம் கொண்டு வாருங்கள் என்று அந்த அலுவலகத்திலே சொல்கிறார்கள். அப்படி அடுத்த வாரம் சென்றால் இந்த வாரம் நிறைய முத்திரை இடுவது இருக்கிறது; அதனால் முடியவில்லை, அடுத்த வாரம் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். இதனால் வியாபாரிகள் மிகவும் சிரமம் அடைகிறார்கள். வியாபாரிகள் மறந்து விட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏன் முத்திரை இடவில்லை என்று கேஸ் போட்டுவிடுகிறார்கள். வியாபாரிகள் மீது அன்பும், பாசமும் வைத்துள்ள நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த ஆட்சியிலே இதைப் பரிசீலனை செய்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முத்திரை இட அனுமதி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டம் மாநிலச் சட்டம் அல்ல. இது மத்தியச் சட்டம். 'சென்ட்ரல் ஆக்ட்'. அவர்கள்தான் இதனைச்

1995 ஏப்ரல் 10]

செயல்படுத்துகிறார்கள். இந்தியா எங்கும் ஒரே சீராக எடைகளில் துல்லியம் 'அக்யூரசி' பேணப்படவேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு, இந்தியா முழுவதும் இது அமுல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் இந்த மீட்டர் அளவுகோல், தராசு, எடைக் கற்கள் ஆகியவை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை முத்திரையிடப்பட்டு வந்தன. பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முத்திரையிடப்பட்டு வந்தன. இப்போது ஓராண்டுக்கு ஒருமுறை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசால் இட்ட கட்டளை என்று சொல்கிறார்கள். இந்திய அரசை வற்புறுத்தி அதை இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை என அனுமதிப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்வோர்கள் 'கன்சியூமர்ஸ்' நலனைக் கருத்தில் கொண்டு இந்த நடைமுறை அனுசரிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவுதான் மீட்டர் அளவுகோல், தராசு, படிகள் போன்றவைகளுக்கு முத்திரை வைத்தாலும் வியாபாரிகள் பொதுமக்களை ஏமாற்றுகிற அளவில் ஒரு படிக்கு முக்கால் படி என்று குலேபகாவலி படத்தில் புரட்சித் தலைவர் பாடுவார், அந்த முறையில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், இதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதோடல்லாமல், ரோட்டிலே ஈயம் பித்தளைக்கு பேரிச்சம்பழம், வேஸ்டான தாளுக்கு சேவு அப்படியெல்லாம் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் தராசு சரியாக இல்லை, பொது மக்களை, அப்பாவி மக்களை அவர்கள் ஏமாற்றுகிறார்கள், இதைத் தடுக்க கடைகளில் அல்லாமல் ரோட்டிலே இருக்கக்கூடிய அந்த வியாபாரத்திற்கும், சேவுக்கும் மற்றும் தாளுக்கும் இருக்கக்கூடிய அளவுகோல் சரியாக இருக்கவேண்டும். இத்தகைய தவறுகளையெல்லாம் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

[1995 ஏப்ரல் 10

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மீட்டரிலே எடைபோடுகிற முறையை, நம்முடைய அரசாங்கம் அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. கையிலே இரண்டு பக்கமும் தராசை வைத்துக் கொண்டு, அதிலே கல்லை வைத்து எடைபோடுகிற பழைய முறை ஒழிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறைகளையெல்லாம், அரசு இயந்திரம் கவனித்து ஆவன செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 283, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

283—

விருத்தாச்சலத்தில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

20530—திரு. ஆர்.டி. அரங்கநாதன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலத்தில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விருத்தாச்சலத்தில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விருத்தாச்சலத்தில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர்.டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்